உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்!

தமிழண்ணல் இராம. பெரியகருப்பன்

தமிழ்நாடு அறக்கட்டளை வாழ்த்து !

அமெரிக்க நாட்டில் வாழ்ந்தும்
அன்னையை மறவா நல்லோர்
தமதுயிர் தமிழ்த்தாய் என்றே
தழைத்திடச் செய்யும் மேலோர் !
தமிழ்நாடு அறக்கட்டளைப்பேர்த்
தகைஞராய் வாழும் செல்வ
அமைதியாய் ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவிக்கும் சான்றோர் !

தோட்டத்தின் ஓரமாக
வாடிடும் மலர்ச்செடிக்கும்
வாட்டத்தைப் போக்கிக் காத்து
வளர்ப்பதே அறமதாமே !
ஈட்டிட இயலா ஏழை
படிப்பினை இடையில் விட்டோர்
நாட்டினில் தேடிக் கல்வி
நல்கிடும் அறங்கள் வாழ்க !

தமிழண்ணல் இராம. பெரியகருப்பன்

Tamilnadu Foundation 35th National Convention

May 28 -31, 2010
Philadelphia, USA

முதற் பதிப்பு : மே, 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041, வைகாசி (விடை)

நூல் விவரம்

நூலின் பெயர்	:	உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்
ஆசிரியர் பெயர்	:	'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன்
முதற்பதிப்பு	:	மே, 2010
தாளின் தன்மை	:	வெள்ளைத்தாள்
நூல் அளவு	:	கிரவுன் அளவு
மொத்தப் பக்கம்	:	48
அச்சிட்டோர்	:	3rd i impressions, Ch-23.
ஒளி அச்சுக் கோவை	:	ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை.

தமிழ் கற்போம்

தமிழுடன் பழகுவோம்

தமிழராய் வாழ்வோம்

வணக்கம்.

இன்றைய உலகில் தாய்மொழி மட்டும் போதாது. நம் வேலை வாய்ப்பு, வாழ்க்கை முன்னேற்றத்திற்கேற்ப பிறமொழி பலவும் கற்போம்.

ஆயினும்– அவற்றுடன்

தாய்த் தமிழை மறவாது கற்போம்.

தமிழிலுள்ள இலக்கியச் செல்வங்களைப் படித்துப் பயன் பெறுவோம், இன்புறுவோம்; மன அமைதி பெறுவோம்.

இந்நூல் தமிழைப் பிழையின்றி எழுத வழிகாட்டுகிறது. ஒரு பானைச் சோற்றுக்கு சில சோறுகள் பதம் பார்க்கத் தரப்பட்டுள்ளன.

படியுங்கள், படிப்படியாகத் தமிழுடன் பழகுங்கள். தமிழே நம் அடையாளம் எனப் போற்றுங்கள் பிறரைப் போல நீங்களும் நமது பண்பாட்டை, நாகரிகத்தை, இலக்கியச் செல்வத்தை அறிந்து, காப்பாற்றித் தமிழராய் வாழ வேண்டும்.

இவ்வாறு ஒரு மனப்பழக்கத்தை ஏற்படுத்த வாய்ப்புத் தந்த, அமெரிக்க நாட்டிலுள்ள **'தமிழ்நாடு அறக்கட்டளையினர்க்கும்'** குறிப்பாக அதன் தலைவர் **சோமலெ.சோமசுந்தரத்திற்கும்** என் நன்றியும் வாழ்த்தும் உரிய!

தமிழண்ணல்

தமிழ் ஒரு செவ்வியல் மொழி!

(Thamizh is a Classical Language)

இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஒரு தனித்தியங்கவல்ல திராவிட மொழி எனக் குறிப்பிட்டார்.

இந்தியச் சான்றோர் பலரும் மரபுவழியாக வடமொழி, தென்மொழி என்றே சமஸ்கிருதத்தையும் தமிழையும் குறித்து வந்தனர்.

ஐரோப்பியர்கள் – ஆங்கிலேயர்கள் முதன் முதல் கோல்கத்தாவில் கால் கொண்ட போது, அவர்களுக்கு முதலில் அறிமுகமான பெருமொழி சமஸ்கிருதமே. அதனை விரும்பிக் கற்றனர். அதனால் அது உலகெலாம் பரவியது. இந்திய நாட்டின் மொழி, பண்பாடு, நாகரிகம் எல்லாம் சமஸ்கிருதமும் அதன் தொடர்புடைய கிரந்தம்,பாலி, அர்த்தமாகதி முதலான மொழிகளுமே என நம்பினர்.

தென்னிந்திய மொழிகளை ஆராய்ந்த குண்டர்ட் முதலான சிலரது வழியில், முழுமையாய் இவ் ஆய்வில் ஈடுபட்ட, அயர்லாந்து அறிஞர் இராபர்ட் கால்டுவெல்தான், சமஸ்கிருத மொழிக் குடும்பத்தின் வேறான, திராவிட மொழிக் குடும்பம் என ஒன்று முன்பிருந்தே தழைத்தோங்கியது என ஆராய்ந்து விளக்கியுரைத்தார். அதன் பிறகே திராவிட மொழிகளின் வளர்ச்சி நிலைகள் ஆராயப்பட்டன.

வடமொழிப் பேராசிரியர்களான எமனோவும் பரோவும் இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் 23 திராவிட மொழிகள் வழங்கின எனக் கண்டறிந்து, சான்றுடன், 'திராவிட மொழிகளின் வேர்ச் சொல் அகராதி'யைத் தொகுத்துத் தந்தனர்.

முன்பு தென்னிந்தியாவில் 'சென்னைப் பல்கலைக் கழகம்' ஒன்றே சிறப்புற்றிருந்தது. அதன் கீழ் சென்னை – தாம்பரம் கிறித்துவக்கல்லூரி இயங்கியது. இதன் நிறுவனர்கள், ஆசிரியர்கள், படிப்பவரிலும் பலர் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர்.

தமிழ்த் துறைக்கு மட்டும் வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் ஆசிரியராக இருந்தார். நாட்டுப்பற்றுடன் மொழிப் பற்றும் விடுதலை வேட்கையும் கொண்ட அவர் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என மாற்றிப் புனைந்து கொண்டார்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்ட சென்னைப் பல்கலைக் கழகமும் வடமொழிக்கே முதன்மை தந்தது. தமிழை ஒரு வட்டார மொழி, உள்நாட்டு அடிமைகள் பேசும் மொழி, (Regional language, Vernacular language) என்ற தகுதி தந்தது, பாடத்திட்டம் முதலாயின வகுத்தது.

ஆங்கிலேயருக்குட்பட்ட ஒரு கல்லூரியில், அவ் ஆங்கிலேயருக்குக் கீழே வேலை பார்த்தாலும், 'தமிழ் மொழியின் வரலாறு பற்றிய' தமது நூலில், இக் கொடுமையைச் சாடி, தமிழ் வடமொழிக்கு நிகரான, தொன்மை வாய்ந்த உயர்தனிச் செம்மொழியே என்பதைப் பரிதிமாற் கலைஞர் வலியுறுத்தி எழுதியுள்ளார். இது அன்றே பாடநூலாகி, அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளிலும் பயிலப்பட்டது. அவர் அந்நூலில் குறித்துள்ள செய்திப் பகுதி, இன்றைய நமக்கும் உணர்ச்சி ஊட்ட வல்லதாகும்.

"தமிழ் நாட்டில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்ட பின்னர்த் தாய்மொழியாகிய தமிழை அதன் வழிமொழிகளாகிய தெலுங்கு, கன்னட மலையாள துளுவங்களோடு அடக்கி 'உண்ணாட்டு மொழிகள்' என வகைப்படுத்தினர் சிலர். தனிமொழி ஒன்றை அதன் வழி மொழிகளோடு வகைப்படுத்தலாமோ? அது முன்னதனை இழிவு படுத்துவ தாகாதோ?

ஆரிய மொழிகளுள் தலைநின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாமை போலத் தமிழ்மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாதிருத்தலே அமைவுடைத்தாம். இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வ கலா சாலையார் மேற்கூறியாங்கு, தமிழை இழிவுபடுத்தி வகுத்தபோதே, தமிழராயினார் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருக்க வேண்டும். அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் தமிழ் மொழியாளர்!"

உயர்மொழி

வடமொழி, இலத்தீன், கீரிக்கு முதலியனபோலத் தமிழ்மொழியும் '**உயர்தனிச் செம்மொழி**'யாமாறு சிறிது காட்டுவாம்.

தான் வழங்கும் நாட்டின்கண்உள்ள பலமொழிகட்கும் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே 'உயர்மொழி'. இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ், தெலுங்கு முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர் மொழியே என்க.

தனிமொழி

தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியின் உதவி களையப் படின்

தெலுங்கு முதலியன இயங்குதல் ஒல்லா; மற்றுத் தமிழ்மொழி அவற்றின் உதவி இல்லாமலே சிறிதும் இடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்க வல்லது. இஃது இந்திய நூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலின் தமிழ் தனி மொழியே என்க. இனிச் செம்மொழியாவது யாது?

செம்மொழி

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் 'செம்மொழி'யாம் என்பது இலக்கணம். இம் மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன் முடிபுகளும் பொருள் முடிபுகளுமின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதினுணர வல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின் கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக் கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்கள் ஏற்படுமிடத்துப் பிற பாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர் தனித் தமிழ்மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி என்பது திண்ணம்.

உயர் தனிச் செம்மொழி

செவ்வியல் மொழி (Classical Language)

இதுபற்றியன்றே தொன்று தொட்டுத் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிரா நின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் 'உயர் தனிச் செம்மொழி'யேயாம் என்பது நிச்சயம்.

இவ்வளவு உயர்வும் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதம் எனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்."

பரிதிமாற் கலைஞரின் இவ் வுரையில், நேற்றைய நிலை மட்டுமன்றி, எதிர்காலக் கடமைகளும் நிரம்பியுள்ளன.

(தமிழ்மொழியின் வரலாறு, சென்னை, பத்தாம் பதிப்பு, 1958, பக். 140-143)

உள்ளுறை

பழகு தமிழ்

எண்.	தலைப்பு
1.	திருவளர் செல்வி
2.	பழமுதிர்சோலை
3.	ஆத்திசூடி
4.	வாழ்க வளமுடன்
5.	அடையாறும் பெரியாறும்
6.	இயக்குநர்
7.	Tamil and Thamizh
8.	வாய்பாடு
9.	சிவப்பு
10.	கறுப்பு
11.	பன்னிரண்டு
12.	நினைவு கூர்தல்
13.	துப்பு துலக்கப்படுகிறது
14.	புலன் விசாரிக்கப்படுகிறது
15.	அகத்தியர் கடலையா சாப்பிட்டார்
16.	பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும்
17.	உழவர் சொல்வளம்
18.	கட்டிடக் கலைஞர் சொல்வளம்

19. மட்டந் தட்டுதல்
20. பூசி மெழுகுவது
21. ஓரெழுத்தொருமொழி
22. ஈரெழுத்தொரு மொழி
23. சங்க காலப் பெயர்ச் சொற்கள்
24. தொடர்ச் சொற்கள்
25. தமிழ்ச் சொற் கட்டமைப்பு
26. சொல்லின் மூவகை நிலை
27. பிற மொழிச்சொல்
28. தமிழாக்கச் சொல்
29. பிரித்து எழுதுதல்
30. சேர்த்து எழுதுதல்
31. வேற்றுமைகள் வேண்டுமா?
32. பத்திரத்தில் வேற்றுமை
33. தமிழ்ச்சொல்லழகு
34. கடைக் கண் அருள்க
35. இலக்கணக் கலைச் சொற்கள்
36. இருதிணை
37. உயிரின வகை
38. ஆறறி உயிர்கள்
39. ஒருபொருட் பல சொற்கள்
40. முன்னெழுத்து

1. திருவளர் செல்வி

சீரும் சிறப்பும் செல்வமும் அழகும் என்றும் **வளர்கிற** செல்வி. திருமண மகளைத் திருவளர் செல்வி என்றும் மணமகனைத் திருவளர் செல்வன் என்றும் தான் குறிக்க வேண்டும். வளர்கின்ற, வளர்ந்த, இன்னமும் வளரும் சிறப்பை இது குறிக்கும். (இடையில் ச் ஒற்று போடக்கூடாது) அதுபோல திருநிறைசெல்வி, திருநிறை செல்வன் என்று தான் எழுத வேண்டும். என்றென்றும் நிறைந்து கொண்டே இருக்கும் செல்வத்தை இது குறிக்கும்.

வளர்செல்வன், வளர்செல்வி
வளர் தமிழ்போல வாழ்க, வாழ்கவே!

(திருமண அழைப்பிதழில் திருவளர் செல்வி, திருவளர் செல்வன் என்றே அச்சிடுவோம். இடையில் 'இச்' போட வேண்டாம். அது திருமணத்திற்குப்பின் அவர்கள் பாடு என விட்டுவிடுவோம்!)

நூற்கள் – தவறு X நூல்கள் – சரி ✓

2. பழமுதிர்சோலை

முருகப் பெருமானின் ஆறு படைவீடுகளில் ஒன்று, மதுரையை அடுத்த அழகர் மலையின் மேலே இருக்கின்ற பழமுதிர் சோலையாகும். இதனைச் சோலைமலை என்றும் கூறுவதுண்டு. அங்கு சிலம்பாறு ஓடுகிறது. என்றென்றும் பூத்துக் காய்த்துக் கனிகள் தரும் சோலையாதலால் பழம் + முதிர் + சோலை எனப்பட்டது. இன்று பலவகைப் பழங்களை விற்பனை செய்யும் கடைக்குப் பழமுதிர் சோலை என்று பெயர் வைக்கிறார்கள். என்றென்றும் கனிந்தபழம் தரவேண்டுமாதலால், இடையே ச் வேண்டாம். திருமுருகாற்றுப்படையில், நக்கீரர், 'பழ முதிர் சோலை மலைகிழவோனே' என்றுதான் முருகனைக் குறிப்பிடுவார்.

பழமுதிர் சோலைப்
பெயர் வைத்த தமிழர்
பழனி முருகன் திருவருள் பெறுகவே!

(பழமுதிர் சோலை என்றே சொல்வோம்; எழுதி வைப்போம்; அப்போதுதான் அது தமிழ் வளர் சோலையுமாகும்.)

3. ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

என்பார் ஔவையார். ஆத்தி சூடி – ஆத்தி மாலையைச் சூடிய சிவனால், அமர்ந்த தேவனை – விரும்பப்பட்ட பிள்ளையார்ப் பெருமானை. ஏத்தி ஏத்தி – புகழ்ந்து, புகழ்ந்து பாடி. தொழுவோம் யாமே – நாம் கும்பிடுவோமாக. (இடையில் 'ச்' வேண்டாம்)

ஏத்தி ஏத்தித் தொழுவது தான் அருச்சனை. 'அருச்சனை பாட்டேயாகும்' என்பார் சேக்கிழார். இறைவனது புகழே உண்மைப்புகழ். அப் 'பொருள்சேர் புகழைப் புரிவார்' (பாடிப் பரவுவாரிடம்) இருள் சேர் இருவினையும் சேரா என்பார் திருவள்ளுவர். இறைவன் முன் அமர்ந்து, கடவுளது குணநலன்களைப் பாடிப் பாடித் துதிப்பது தான் பயன்தரும் என்பார் மு. வரதராசனார்.

(ஆத்திசூடி என்றே கூறுவோம்; அச்சிடுவோம்.)

(பழமுதிர் சோலை, திருவளர் செல்வி, ஆத்திசூடி எதிலும் இடையே 'ச்' ஒற்று வேண்டாம்)

பதட்டம் – தவறு X பதற்றம் – சரி ✓

4. வாழ்க வளமுடன்

வளத்துடன் என்பது இலக்கணம். நிலத்துடன், நலத்தோடு, குளத்தில், படத்தைப்பார் – இங்கெல்லாம் நிலன் + உடன் = நிலமுடன்; நலம் + ஓடு = நலமோடு; படம் + ஐ = படமை என வருவது இல்லை. இடையே 'அத்து'ச் சாரியை சேர்த்தே சொல்கிறோம். (படம் +அத்து + ஐ = படத்தை).

ஓசையினிமையும் பொருளுணர்ச்சியும் தான் முக்கியமானது. சிலபோது, சில சொற்களில் மாறிவரும். 'அத்து' வராது.

தாங்கள் நலமுடன் இருப்பதறிய அவா. நலத்துடன் என்றும் இதை முடிக்கலாம். இருவிதமாக வருமிடமும் உள; அத்துச் சாரியை சேர்த்தே வருமிடமும் உள; ஒரு பெண் குடத்துடன் வருவாளே, தவிர குடமுடன் வரமாட்டாள். அங்கு அத்துச் சாரியை அவசியம். ஆக்கமொடு, காலமொடு எனவும் உலகமொடு, நலமுடன் எனவும் வருமிடங்கள் உள.

வாழ்க வளத்துடன் என்பதை வாழ்க வளமுடன் என்றால் தவறில்லை. (எல்லோரும் உடல் நலமோடு, செல்வ வளமுடன் வாழ, நல்ல மனத்துடன் வாழ்த்துவோம்.)

5. அடையாறும் பெரியாறும்

சென்னையில் ஓடுவது 'அடையாறு'. கடலில் சென்றடையும் ஆறு அது. அதனை அடையாறு என்றுதான் எழுதவேண்டும். ஆனால் பெயர்ப்பலகை முதல் Adaiyar என்று ஆங்கிலத்தில் எழுதி, தமிழிலும் அடையார் என்றே எழுதிவைக்கின்றனர்.

எங்கு நோக்கினும்
அடையார்,
இவர் தமிழ் நலம் அடையார்!

ஆங்கில இதழேயாயினும் Adaiyaru என்றே எழுதவேண்டும்.

நம் நாட்டில்தான் Periyar, Palar, Silambar எனப் பெரியாறும் பாலாறும் சிலம்பாறும் 'கௌரவப் பதவி' பெற்றுவிடுகின்றன. 'பெரியார் நீர்ப் பாசனக் கால்வாய்' என்று அங்கங்கே எழுதிவைக்கின்றனர்.

எதிர்காலத்தில் ஒருவர்இது தந்தை பெரியார் பெயரால், அவர் நினைவாக அமைத்தவை என ஆய்வு செய்து 'டாக்டர்' பட்டமும் பெற்றுவிடக் கூடும்.

திருவையாறு என்பதை 'Trivadi' என எழுதியிருந்தனர்.

இதனால் தான் தமிழகத்து ஆறுகள் எல்லாம் வற்றி வறண்டு போயின போலும். Mullai Periyar Dam என்று போடுவது என்ன நியாயம்?

Damn - Fool என்ற வார்த்தையைத் தவறாக எழுத வெட்கப்படும் ஆங்கில நாளேட்டினர், தமிழை மாற்றி எழுதலாமா? Periyaru Dam என்றே ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும்.

(சென்னையில் **அடையாறு** என்றே முழுவதும் எழுதப்பட்டு, பிற ஆறுகளனைத்தும் அதைப் பார்த்தேனும் ஆறுகளாகவே ஓடும் காலம் வருமா?)

6. இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநரே – இயக்குனர் என்று போடலாமா? முன்பு பொருநன், மகிழ்நன், ஆடுநன், பாடுநன் என்றுதான் எழுதினர்.

இயக்குகின்றவனைப் பெயராகச்சுட்டும் போது, தந் 'ந'கரம் போட்டு இயக்குநன் என்றால் தான், அது பெயர்வடிவம் பெறும். அவன் இயக்கினான், பாடினான், மகிழ்ந்தான் என்பனை வினைச் சொற்கள். இயக்குநன், பாடுநன், மகிழ்நன் அச்செயலுக்குரியவர்களைக் குறிக்கும் பெயர்கள்.

எனவே எந்த வகையிலும் இயக்குனன், பாடுனன் எனப் ('ன்' –றன்னகரம்) போடவே கூடாது.

இன்று நாடு முழுவதும் இயக்குநர் குழாம் பெருகிவிட்டது. ஓட்டுநர், நடத்துநர் ஒருவகை. பேசுநர், பாடுநர் – கேட்குநர் ஒருவகை. இன்று போடப்படும் வல்லுநர் குழுக்களுக்குக் கணக்கில்லை. இயக்குனன் என்பது ஒருவரைப் பார்த்து ஒருவர் தப்புத்தப்பாய்ச் செய்யும் தப்பு.

வினைகள் பெயர்வடிவமாகும் ஒரு தமிழ் மரபு இது.

(அறியுநர், ஆய்குநர், ஆர்வம் காட்டுநர் எல்லாம் இனி தமிழைப் பிழையின்றி எழுதுநராக வேண்டுமென்று, வேண்டுவோமாக!)

சுப்ரமண்யன் – தவறு X   சுப்பிரமணியன் – சரி ✓

7. Tamil and Thamizh

ஆங்கிலேயனுக்குத் தமிழ் ஒலிப்பு வராதபோது, அவன் எல்லாவற்றையும் அவனது உச்சரிப்பு முறைக்கு ஏற்ப மாற்றினான். நம் தமிழர்களும் அதைப் பின்பற்றினர்.

திருநெல்வேலி	–	Tinnaveli
தூத்துக்குடி	–	Tuticorin
மதுரை	–	Madura
திருச்சிராப்பள்ளி	–	Trichy
விழுப்புரம்	–	Villupuram

இவ்வாறு எத்தனை எத்தனையோ? தமிழரும் ஆங்கிலப் பெயரையே மூலப் பெயர்கள் போல ஆள்வதுதான் கொடுமை.

தமிழையும் அவன் Tamil என்றதையே இன்றும் நாம் பயன்படுத்துகிறோம். Thamizh என்பதே ஆங்கிலப் படுத்திய தமிழாகும். Tamilnadu என்றுதான் நம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுவிட்டது. எனவே இரண்டு விதமாகவும் பயன்படுத்தலாம்.

மறைந்த மதுரைப் பாராளுமன்ற உறுப்பினர், மோகன் அவர்கள் இதை எனக்கு அடிக்கடி நினைவுறுத்தியதுடன், நாங்கள் இருவரும் ஒப்பமிட்டுத் தமிழக அரசுக்கு அனுப்பியதுண்டு. முழுவதும் உடனே மாற்ற முடியாது. படிப்படியாக Thamizh என்றும் போட்டுப் பழக்கப் படுத்தலாம்.

(இப்போதாவது Thamizh என்றும் போட்டு, நம் தமிழை – அதற்குரிய ஒலிப்பைப் பிறநாட்டவனும் உணரச் செய்வோமாக!)

8. வாய்பாடு

இந்தியாவில் வங்காளி, மராத்தி, குசராத்தி, இந்தி, கன்னடம் போலும் எல்லா மொழிகளிலும் அவரவர் மொழி எண்களையே பயன்படுத்துகின்றனர்.

தமிழிலும் மிகப் பழைமை வாய்ந்த எண்கள் இருந்தன. அவை சில சீர்திருத்தப்பட்டுக் கடந்த நூற்றாண்டு வரை அச்சிலும் இருந்தன.

இன்று அரபி எண்களைப் பயன்படுத்தியே பழகிவிட்டோம்.

வாய்பாடு என்று சிறு பிள்ளைகளுக்கு முன்பு தமிழில் சொல்லித்தந்து, அது மனத்தில் நன்கு பதிந்ததால் நம்மவர்கள் வழிவழியாக, கணக்கை வாய்மொழியாகவே சொல்லிவிடும் வல்லமை பெற்றிருந்தார்கள். கூட்டல் வாய்பாடு, கழித்தல் வாய்பாடு, பெருக்கல் வாய்பாடு, வகுத்தல் வாய்பாடு நான்கையும் இருபதுவரை இளமையில் கற்றுக் கொடுத்ததால், அது பிள்ளைகள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருந்தது.

ஆங்கில மீடியம் படித்துவிட்டுப் போங்கள். இவ் வாய்பாட்டை மட்டுமாவது தமிழிலேயே கற்பித்து, மனப்பாடம் செய்ய வையுங்கள்! தமிழராகப் பிறந்ததற்குத் தமிழ் எண்ணும் எழுத்துமாவது தெரியட்டும்.

இதை 'வாய்பாடு' என்று நூலாக வெளியிட்டுத் தரும் மரபு உண்டு.

இதனை **வாய்பாடு** என்றே போட வேண்டும். சிலர் வாய்ப்பாடு எனப்போடுவது தவறு. வாய்க்கணக்கு, வாய்ப்பாட்டு வேறு. குடத்துக்கும் பானைக்கும் 'வாய்ப்பாடு' உண்டு. அதுவேறு.

இது வாய்பாடு – மனத்தில் பதியவைக்கும் ஒரு முன் மாதிரிக் குறியீடு. வாய்பாடு –நினைவில் வைக்கக் கூடியது. ஆங்கிலத்தில் Formula, Model, Table என்பர்.

கைமாறு – தவறு X கைம்மாறு – சரி ✓

9. சிவப்பு

சிவந்த நிறம். கோபத்தால் முகம் சிவப்பாகும். கண்களில் சிவப்பேறும். இதனால் சிவப்பு என்பது கோபத்தைக் குறிப்பது நிழற்பொருள். அதன் நேர்பொருள் சிவந்த நிறம் என்பதே. அமெரிக்கச் செவ்விந்தியர்களின் நிறம் இரத்தச் சிவப்பாக இருக்கும்.

சிகப்பு - நாம் பேச்சுவழக்கில் திரித்து வழங்குவது. இதனால் சிவப்பியைச் சிகப்பி ஆக்கிவிட்டோம்.

தமிழில் சிவப்பி - திருமகள், இலட்சுமி. கருப்பி - மலைமகள், உமையம்மை. இது கருப்பாயி, கருப்பாத்தாள் என்றெல்லாம் வழங்கும்.

செம்மை, செக்கர் (வானம்), செவலைக் காளை, செம்மண், செம்புலம், செங்குன்றம் என்பன எல்லாம் சிவப்படையால் பிறந்தன.

வெள்ளை வெளேர், பச்சைப் பசேர், செக்கச் செவேர் என்ற தொடர்களும் பேச்சிடையே வரும். சேயோன் - சிவந்த நிற முடைய முருகன். செக்கச் சிவக்கச் சிலர் வெற்றிலை போடுவார்கள்.

என்றுமே சிவப்பு ஓர் அழகு என்ற கருத்துண்டு. களையாக இருக்கிறாளா, திருத்தமாக இருக்கிறாளா என்று பார்ப்பவர்கள் நிறம் பற்றிக் கவலைப் படுவதில்லை.

பெண் சிவப்பாக இருக்கிறாளா? – என்று கேட்டு யாரேனும் வந்தால், அவர்களை மறுநாள் வாருங்கள் எனச் சொல்லியனுப்புங்கள். பெண் பார்க்கக் களையாக இருப்பாளா, அழகாக இருப்பாளா, திருத்தமாக இருப்பாளா என்று கேட்டுவந்தால் உடனே வரவேற்று அமரச்சொல்லுங்கள்!

10. கறுப்பு

நிறத்தைக் குறிக்கும் சொல் 'கருப்பு' என்பதுதான். கறுப்பு - சினத்தையே முதலிற் குறிக்கும்; சினத்தால் முகம் கருத்துப்போவதால், கறுப்பு நிறத்தையும் குறிக்கலானது, அதன் நிழற்பொருள்.

தொல்காப்பிய உரியியல் அருஞ்சொற்பொருள் குறிக்க வந்தது. 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' (855) என்பார் அவர். கறுப்பு - கடுங்கோபம், வெகுளி. அடுத்து 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப' (856) என்பது அதே சொல் கருப்பு நிற உருவையும் குறிக்கும் என்று, முன்னதின் நிழற் பொருளாக வருவது.

பொதுவாக 'கருப்பு' என்ற சொல், நிறத்தையே குறிக்கும். கருப்பு, கரிது, கரிய, கரி, கரியும் போன்ற சொல் வடிவங்கள் அதனை ஒட்டியனவே. கருவிழி, கருவிரலூகம் (கருங்குரங்கு), கருமுகில் என வரும் சொற்கள் பலவுள. கரும்புள்ளி, கருங்குயில், கார்காலம், கருங்குளம் என எண்ணிப் பார்க்கலாம்.

கையில் அரிவாளுடன், சீற்றத்துடன் நிற்கும் தெய்வத்தைக் 'கறுப்பண சாமி' என்பர். நிறம் பற்றி வரும் போது பெரிய கருப்பன், சின்னக் கருப்பன், நல்ல கருப்பன் என்பர்.

'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்று தயரதனிடம், விசுவாமித்திரர் இராமனைத் துணைக்குத் தரக் கேட்பதாகக் கம்பர் பாடுகிறார்.

கறுப்பு – வெகுளி, கடுங்கோபம், அதனால் முகங்கருக்கும் கருநிறம்.

கருநிறம் பற்றி நேரே சுட்டுவது கருப்பு என்பதே. 'கருப்பின்கண் மிக்குள்ளது அழகு' என்பது, இலக்கணக் காட்டு.

மெய்மை – தவறு X மெய்ம்மை – சரி ✓

11. பன்னிரண்டு

பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு
பத்து + மூன்று = பதின் மூன்று
பத்து + நான்கு = பதின் நான்கு (பதினான்கு)

பத்து இரண்டும் சேர்ந்தால் பதினிரண்டாகலாம். ஆயினும் அதை பன்னிரண்டு என்று கூறி, எழுதிப் பழகிவிட்டனர். இரண்டு என்பதைச் சிலர் "ரெண்டு" என்றே கூறிவிடுவர். இரட்டைச் சுழி – ரெட்டைச் சுழி ஆகும். இரட்டை இரட்டையாக என்பதை ரெட்டை ரெட்டையாக என ஆக்கிவிடுவர். இப்படிப் பேச்சில் ஏற்படும் திரிபுகள் மிகப்பல. ஆனால் எழுதும் போது ஒழுங்காக எழுதுவர். இரட்டைச் சுழி, இரட்டையிரட்டையாக என்பர்.

பன்னிரண்டைச் சிலர் பன்னிரெண்டு என்றே தவறாக எழுதி விடுவதைப் பார்க்கிறோம். ஆங்கிலத்தில் சிறுதப்பும் செய்யக் கூசும் நாம், தமிழில் கூசாமல் தப்புச் செய்யலாமா?

பன்னிரண்டு என்றே எழுதவேண்டும். சிலசமயம் பனிரண்டு என்பதில், 'ன்' இடைக்குறை. அது தவறன்று.

இதனைப் பன்னிரண்டு முறை சொன்னாலும் அதை மறந்து விடுகின்றனர். 'பன்னிரு கையும் பாற்பட இயற்றி' – திருமுருகாற்றுப்படை. 'ஆறுமுகமும் பன்னிரு கையும்' – கந்தர் சட்டி கவசம்.

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வருவது மாமாங்கம். ஐந்து மாமாங்கம் ஒரு வியாழவட்டம். ஒரு வியாழவட்டத்தில் அறுபது ஆண்டு முடிவதால், அன்று மணி விழாக் கொண்டாடுகின்றனர்.

12. நினைவு கூர்தல்

நம் தொல்காப்பியரை நினைவு கூர்கிறோம். நம் நாடு விடுதலை பெற உயிர்த் தியாகம் செய்தவர்களை நினைவு கூர்கிறோம். ஒருவர் செய்த நன்றியை நினைவு கூர்தல் வேண்டும்.

இவ்வாறு இச்சொல் இன்று அடிக்கடி பயன்படுகிறது. ஆனால் பெரியவர்களும் கூட 'நினைவு கூறுகிறோம்' என்று பேசியும் எழுதியும் விடுகின்றனர். அது தவறு. நம் முன்னோர் இச்சொல்லைப் பயன்படுத்திய விதத்தை நினைவு கூர்ந்தால் நாம் இவ்வாறு தவறுசெய்ய மாட்டோம்.

நினைவு கூர்தல் – முன்பு நடந்ததைச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டுவருதல். கூர்தல் – உரிச்சொல். சிறிது சிறிதாக மிகுதிப்படுதல்.

'கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்' (797) என்பது தொல்காப்பியம். கூர்தல் – உள்ளது சிறத்தலென்ற பரிணாமம். தார்வினின் கோட்பாடாகிய இதை திரு.வி.க. கூர்தலறம் (Evalution) என்பார்.

முன்பு படர் கூர் மாலை, துயர் கூர் வாடை என்பார்கள். துன்பம் மிகுவதை அவை குறித்தன.

நாமும் நல்ல தமிழை நினைவு கூர்ந்து, பிழையின்றி எழுதுவோமாக!

(நினைவு கூறுதல் என்பது பிழைபட்ட ஒரு சொல். வள்ளுவர் கோட்டம் திருவள்ளுவரை நினைவுகூர்ந்து எழுப்பப்பட்டது.)

13. துப்பு துலக்கப்படுகிறது

'து' - என்றாலே உணவு, சாப்பிடு என்று இரு பொருள் உண்டு. துய்ப்பு - நுகர்தல், அனுபவித்தல். துப்பு - என்பது அதன் வழிவந்தது. அதற்கும் உணவு என்ற பொருளுண்டு. துப்புக்கெட்டவன் - உண்ண உணவு கூட இல்லாது வறுமைப் பட்டவன். அதன்வழி மானங்கெட்டவன் எனவும் பொருளானது. (உமிழ்நீர் முதலியவற்றைத் 'துப்பு' என்பது வேறு)

துப்பறிதல் - உளவறிதலானது. ஒருவனது நுகர்ச்சிப் பழக்கத்தை அறிவதாகும். அதை வைத்துத் தானே பிற உண்மைகளை அறிய முடியும்.

முன்பு துப்பறிதல் என்பது உளவறிதல் என்று பொருள்பட்டது. இன்று துப்புக் கிடைத்துவிட்டது, துப்பு துலக்கப்படுகிறது என்றெல்லாம் நாள்தோறும் செய்திகள் வருகின்றன.

வாசனையை வைத்து, திருடியவனைக் கண்டு பிடிப்பதால் நாய் கூடத் துப்பறியும் நாய் என அழைக்கப்படுகிறது.

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. (1050)

துப்புரவு - உண்ண, உணவு கூட இல்லாத, முயற்சியற்றவர்கள்.

துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
துப்புஆய தூஉம் மழை (12)

துப்பு - உணவு.

14. புலன் விசாரிக்கப்படுகிறது

இவை போல்வன இன்றைய தலைப்புச் செய்திகள். கொலை, திருட்டு நடந்த இடத்திற்குப்போய், விசாரிப்பது இது. புலம் – இடம். அது மட்டுமன்று. புலப்படுதல் என்போம். குற்றவாளி யார் எனத் தெரியாத போது, உண்மை புலப்படுமாறு ஆராய வேண்டுமல்லவா?

பகைவர் நாட்டில்போய் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வருவதை உளவறிதல், ஒற்றறிதல், புலனறிதல், வேய் என்று அழைத்தனர். அவ்வாறு புலனறிந்து வந்தவர்க்குச் சிறப்புச் செய்வர். அது 'புலனறி சிறப்பு' எனப்படும்.

பழங்காலத்தில் பகைவர் நாட்டிற் போய், அங்குள்ளவற்றை உளவறிவதை, 'புலனறிதல்' என்றனர்.

காவலர் கொலை நடந்த இடத்திற்கு விரைந்தனர். கொலையாளி அகப்பட்டான். தொடர்ந்து புலன் விசாரணை நடைபெறுகிறது என்பர்.

புலன் விசாரித்தால்தானே துப்புத் துலங்கும். இன்றைய 'தீவிரவாத' 'பயங்கரவாத' நிலையில் இவை மிகவும் தேவைப்படுகின்றன.

புலன் – பலபொருள் ஒரு சொல். இடம், ஐம்புல நுகர்ச்சி, அறிவு, உண்மையைத் தேடுதல். புலப்பாட்டுத் திறன் என்பர். அத்திறனுடையாரே புலன் விசாரிக்க முடியும்.

15. அகத்தியர் கடலையா சாப்பிட்டார்?

குறுமுனி கடலையே குடித்ததாகக் கதையுண்டு. அவர் கடலைச் சாப்பிட்டார் என்பதால் பொருள் தெளிவு படுகிறது. கடலை சாப்பிட்டார் என்றால் நம்மைப்போலப் பொரிகடலை சாப்பிட்டார் என்றாகிவிடும்.

தமிழில் ஒற்றெழுத்து எங்கு மிகும்? எங்கு மிகாது? என்பன மிகப்பெரிய ஐயங்கள். இவை பழகப் பழகவே, மனப் பழக்கமாகிவிடும்.

ஆங்கிலத்தில் உச்சரிப்பதற்கும் எழுதுவதற்கும் நூறு வேறுபாடு. அவற்றுக்கு இலக்கணம் இல்லை. பழகப் பழக வந்துவிடுகிறது. Tension வேறு; Attention வேறு. இவற்றுக்கு இலக்கணம் ஏது? Conduct ஒரே எழுத்துக் கூட்டல். இதை கண்டக்ட் என்றும் சொல்லலாம்; காண்டக்ட் என்றும் கூறலாம். பொருள் வேறு. இவை பழக்கத்தில் உணர்ந்து பயன்படுத்தப் படுகின்றன.

தமிழ் இலக்கணத்தையும் பழக்கத்தில் அறிய வைக்கலாம்.

ஒற்று மிகுதல் என்பது சிலபோது, சொற்கள் விட்டிசைக்காமலிருக்க, அவற்றை இணைப்பதற்காக வருகின்றன. 'சிக்கனம் வீட்டை காக்கும்; சேமிப்பு நாட்டை காக்கும்'. இது அரசு விளம்பரம். வீட்டைக் காக்கும் என்பது, இணைப்புக்கு வருதலைக் காணலாம். ஒற்று (க்) போடாவிட்டாலும் பொருள் கெடவில்லை. புத்தகத்தை தா, வீட்டை பெருக்கு என இரண்டாம் வேற்றுமை விரியுமிடங்களில் இவ்வாறு வருகிறது. அகத்தியர் கடலைச் சாப்பிட்டதில், பொருள் வேறுபாடுமுளது. அங்கு இணைப்பு மட்டுமில்லை.

16. பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும்

சில இடங்களில் ஒற்றுப் போட்டால் ஒரு பொருள்; போடாவிட்டால் வேறு பொருள்.

வேலை தேடு – ஏதாவது பணி கிடைக்குமா என்று தேடு.

வேலைத்தேடு – வேல் என்ற கருவியைத் தேடு.

கை குட்டை – கை குட்டையானது.

கைக்குட்டை – கைக்குள் இருக்கும் சிறிய துடைதுணி.

கை பிடி – மணமகளின் கை பிடித்து வலம் வந்தான்.

கைப்பிடி – கதவிலுள்ள கைப்பிடியை மாற்ற வேண்டும்.

தந்த கட்டில் – பெற்றோர் மகளுக்குத் தந்த கட்டில்

தந்தக் கட்டில் – பெற்றோர் தந்த தந்தத்தாலான கட்டில்

தங்க குடில் – திருச்செந்தூரில் ஓரிரவு தங்க வேண்டும்

தங்கக் குடில் – தங்கத்தாலான குடில் வேண்டும்.

இவை புணர்ச்சி வேறுபடுவதோடு, பொருளும் வேறுபடுகின்றன.

வாழைபழம், கீரைகறி என்று யாரும் சொல்வதில்லை. மாட்டுக் கொட்டில், ஆட்டுக்கறி, பாட்டுப் பொருள், மனக் கணக்கு, கிழக்குத்திசை, மனக்குறை, இனப் பெருக்கம், மதுரைக் காவலர், படக்கலை, திரைச்சேலை என ஒற்று மிகாத, மிகுமிடங்களையும் எழுதிச் சொல்லிப் படிக்கவைப்பதே நல்ல மனப் பழக்கமாகும்.

இவற்றில் ஒருசொல் நீர்மை, இருசொல் நீர்மை எனவும் பார்க்கலாம். பாம்பு பாம்பு – இருசொல். பாம்புத்தலை– ஒரு தொடர்ச்சொல். மிளகு குவிந்துளது – இருசொல். மிளகுக் குவியல் – ஒரு தொடர்ச்சொல். இவ்வாறு வெவ்வேறு வகையில் பழக்கப் படுத்தப் புதிய நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணம் எழுதவேண்டும்.

நாகரீகம் – தவறு X நாகரிகம் – சரி ✓

17. உழவர் சொல்வளம்

வேளாண்மை என்னும் விவசாயம் மூலம் நாம் பெற்றுள்ள மரபுத்தொடர்கள், சொற்கள் ஏராளம். அவன் வினை விதைத்ததை 'அறுவடை' செய்கிறான். படிப்பில் அகல உழுவதை விட ஆழ உழுவது நல்லது. எப்பொழுதும் குறுக்குச்சால் ஓட்டுவதே சிலர் வேலை.

ஏர் உழுது போகும் கோடுபோல்வது சால். முன்னே போகும் சால்வழியேதான் பின்னே உழுபவன் ஏர் போகவேண்டும்.குறுக்கே 'சால்' ஓட்டக் கூடாது.

அவன் தறிகெட்டுத் திரிகிறான்.

தறி – கட்டுத்தறி. சில மாடுகள் தறியை முறித்து விட்டுக் கண்டபடி திரியும். மனிதரில் சிலரும் தறி கெட்டுத் திரிவர்.

கட்டவிழ்த்து விட்டதுபோல் ஆனது.
கொம்பு சீவி விடவிடக் கோபம் கூடிவிட்டது.
மூக்கணாங்கயிறு போட்டால் சரியாகிவிடும்.
அறுவடைக்குப்பின் தூற்றினால், நெல் மணிகள் நிற்கப் பதர்கள் பரவி விடும்.
யாரையும் பழி தூற்ற வேண்டாம்.
வண்டி கவிழ்ந்துவிட்டது (தோல்வி)
அவர் காட்டில் மழை பொழிகிறது (செல்வம்)
களை எடுத்தால்தான் அலுவலகம் உருப்படும்.

இவை போல்வன பல.

காந்தீயம் – தவறு X காந்தியம் – சரி ✓

18. கட்டிடக் கலைஞர் சொல்வளம்

ஒரு கட்டிடத்தில் இரண்டு சுவர்கள் சேருமிடத்தில், குறுக்கும் நெடுக்குமாகச் செறிவாக வைக்கப்படுவதே கட்டாயக்கல். கட்டு + ஆயம் + கல். அதுபோல் கட்டாயமாகச் செய்ய வேண்டியனவும் அப்பெயர் பெற்றன. சுவர்களில் நீளமாக வைத்துப் போகும்கல் நெட்டாயம் எனப்படும்.

கூரையின் மேல்பகுதி மோந்தாயம்; அதில் பொருத்தும் நீளக்கட்டைகள் வரிச்சு; தச்சு செய்தல், கால்கோள், அடித்தளம், நிலைமட்டம், நெற்றி மட்டம், மேற்கூரை எனவரும் இவ்வாறான ஆயிரக்கணக்கான கட்டிடக் கலைச்சொற்கள் மறைந்து வருகின்றன. ஆங்கிலங்கற்ற கட்டிடப் பொறியாளர்கள் நம் மரத்தச்சர், கல்தச்சர், கொத்தனார், சிற்றாள், நிமிர்ந்தாள் என்போரும் தமிழைப் பயன்படுத்துவதை இழிவாகக் கருதி மறந்துவிடுகின்றனர்.

Terrace - போடுவதைத் தாரிசு போடுவதாகச் சொல்வது தமிழாக்கச் சொல்.

வீடு கட்டக் கால்கோள் செய்வதற்கு மரத்தச்சர்தான் வருவார். அதனால் தச்சுச்செய்தல் என்றனர். இன்று பூமி பூசை என்றும் கூறுகின்றனர்.

தச்சுச் செய்வதை, Touch - செய்வதாக நினைத்துச் சிலர் சொல்வதுதான் வெட்கக்கேடு!

மகாபலிபுரம் – தவறு X மாமல்லபுரம் – சரி ✓

19. மட்டந்தட்டுதல்

கொத்தனார், வீட்டுத் தளம்போடும்போது, மண் முதலியன கிடந்து, அது மேடு பள்ளமாக இருக்கும். அதை முதலில் சமப்படுத்த வேண்டும். ஓரளவு சமப் படுத்தியபின், ஒரே மட்டமாக, சீராகத் தளத்தை ஆக்க மட்டந்தட்ட வேண்டும்.

தண்ணீர் ஊற்றி, நன்கு மட்டந்தட்டிய பிறகே தளம் போட முடியும்.

சிலர் தம்முடன் வேலை பார்ப்பவர்களைத் தமக்கு மேலே உயர்ந்துவிடாமல், ஏதாவது சொல்லி மட்டந்தட்டிக் கொண்டே இருப்பதைப் பார்க்கலாம். ஒருவருக்கு ஒரு சிறப்போ, உயர்வோ வந்தால், பொறாமை தலை தூக்கும். ஏதாவது பேசி மட்டம் தட்டினால்தான் மன ஆறுதலடையும்.

உறுதியாக இது கொத்தனாரிடம் இருந்து பெற்ற சொல்தான் ஏனெனில் அவரிடம்தான் 'மட்டப் பலகை' இருக்கிறது. அதை வைத்து, அவர் மண் தரையை மட்டம் தட்டுகிறார்.

நாம் மட்டப்பலகை இல்லாமலே மட்டம் தட்டுகிறோம். இதனால் அவர்களை விட நாம் திறமைசாலிகள் ஆகின்றோம்!

20. பூசிமெழுகுவது

தளம் போட்ட பிற்பாடும், சிமிந்திப் பாலை ஊற்றி, நன்கு பூசிமெழுக வேண்டும். அப்போதுதான் தரை வழுவழு என்று இருக்கும். பூசிமெழுகினால் சிறுசிறு தும்பு தூசி எல்லாம் போய் மறைந்துவிடும்.

பூசிமெழுகுவது ஓர் அரிய கட்டிடக்கலை. நாமும் ஒருவர் ஒரு சிக்கலை எழுப்பினால் அதற்கு நேரே, சரியான விடை சொல்ல முடியாத போது, எதையாவது சொல்லிப் பூசிமெழுகிவிடுவோம். உள்ளே தும்பு தூசி எல்லாம் மறைந்துபோகும். குற்றங் குறையை மறைத்துச் சாதுரியமாக நல்லவர் போல் பேசுவது இது.

பஞ்சாயத்தில் பலர் நியாயம் பேசாமல் பூசிமெழுகிப் பேசுவார்கள்.

பூசி மெழுகிய பிறகு மழுப்புதலும் உண்டு. மழுப்புதல் இன்னும் சரியாகச் சமப்படுத்துதல். மழுப்புவதும் கொத்தனார் வேலையே. நாமும் பலவற்றை மழுப்பிப் பேசித் தப்பித்து விடுகிறோம்.

இவ்வாறு பல்வேறு வினைஞரிடமிருந்து பெற்ற சொற்களை ஒருவழித் தொகுக்க வேண்டும்.

21. ஓரெழுத்தொருமொழி

தொல்காப்பியர் ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடர் மொழி என்று குறிப்பிடுகிறார்.

நன்னூலார் பகாப்பதம் ஏழு எழுத்து முடிய வருமென்றும் பகுபதம் ஒன்பது எழுத்து முடிய வருமென்றும் கூறுகிறார்.

தமிழில் ஓரெழுத்தொரு மொழிகள் மிகுதி. வேறு எம்மொழியிலும் இத்தனை ஓரெழுத்தொரு மொழிகள் உண்டா என்று தெரியவில்லை.

தொல்காப்பியர் உயிராயும் உயிர் மெய்யாயும் வரும் அனைத்து நெட்டெழுத்தும் தனியே நின்று எழுத்தாயும் பிறிதொரு பொருள் தந்து சொல்லாயும் வரும் என்பார்.

ஆ, பா, தா, போ, கோ, ஐ, சீ, ஈ, நீ இவ்வாறு வருவன, முதலில் உணர்ச்சி மேலீட்டால் மனிதன் சைகை காட்டி உரைத்தன - 'சைகைமொ என்பர். பின்னர் சைகையை விட்டுவிட்டான்.

மா எனக் கத்துவதைப் பார்த்து மாடு என்றும், கூவுவதைப் பார்த்துக் குயில் என்றும் காகா எனக் கத்துவதைக் காக்கை என்றும் கூறியன 'போறல்' மொழிவகை என்பர்.

குறில்களிற்கூட 'து' - உண், உணவு. நொ - நொந்துபோ எனப் பொருள் தருவன உண்டு.

மென்மேலும் - தவறு X மேன்மேலும் - சரி ✓

22. ஈரெழுத்தொரு மொழி

தமிழில் ஈரெழுத்துச் சொற்கள் அளவு கடந்தவை உள்ளன.

தொல்காப்பியர் மூன்றெழுத்துச் சொற்கள் என்று ஏனோ கூறவில்லை?

மூன்றெழுத்துச் சொல்லில் முதலிரண்டெழுத்து உயிர் – உயிர் மெய்யாயும் இறுதி எழுத்து மெய்யாயும் (அல்லது மெய் போன்று ஒலிக்கும் உகரம் அல்லது குற்றியலுகரமாகவுமே) இருக்கும். அதனால் அதை இரண்டெழுத்திலேயே அடக்கிவிட்டார் போலும்

இறை	நடை	மடம்	வளைவு
மறை	படை	இடம்	நாளம்
அறை	வடு	மலர்	நீளம்
அடி	விடு	வலம்	தாளம்
துடி	வீடு	காலம்	நாணம்
நடி	காடு	ஏலம்	காணம்
நட	நாடு	பாலம்	பாட்டு
இடு	ஏடா	படகு	தவம்
பெறு	ஏலே	நாக்கு	தோழி
வறு	பாவு	பாக்கு	தோழன்
கடை	தாவு	விளைவு	

இவ்வகையான ஓரெழுத்துச் சொற்களிலிருந்தே, பிற சொற்கள் உருவாகின்றன. எனவேதான் தொல்காப்பியர் ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொரு மொழி என்றதன்பின் தொடர் மொழி என்றே குறிப்பிட்டுள்ளார். தமிழின் தொன்மையை இது காட்டுகிறது.

தேனீர் – தவறு X   தேநீர் – சரி ✓

23. சங்க காலப் பெயர்ச் சொற்கள்

இன்று சுருக்கமாகப் பெயர் வைக்க வேண்டுமென்று தமிழைத் திரிக்கிறார்கள். ஆங்கிலத்தில் wolf என்றோ wood என்றோ இவ்வாறான பெயர்களை யாரும் தவறாக நினைப்பதில்லை.

சங்க காலத்தில் வழங்கிய சில பெயர்களை மட்டும் காண்போம். அணங்கு, அஞ்சி, அதியன், பாரி, காரி, ஓரி, ஆய், அந்துவன், ஆதன், அழிசி, எழினி, ஆதிரை, அண்ணல், ஆந்தை, ஆரல், ஆழியான், திரு மார்பன், நெடியோன், கோ, அரசு, குமணன், சென்னி, செழியன், மாறன், சேரன், உதியன், உமை, ஐயை, மாதரி, மணிமேகலை, மாதவி, கபிலன், கிள்ளி, வளவன், காமன், குட்டுவன், குமரன், வள்ளி, அல்லி, நல்லி, செல்வி, கயல், மலர், தேன், நாச்சியார், பாவை, பூவை, கொற்றி, செம்பியன், சேயோன், கடுங்கோ, செல்வக்கோ, செவ்வேள், சேய், சேரலன், பொறையன், வானவன், இரும்பொறை, கோக்கோதை, கோதை, சேவற்கொடியோன், சேரலாதன், ஆதி, ஆதிமந்தி, ஆட்டனத்தி, பெருவளத்தான், திருமாவளவன், தித்தன், தித்யன், பாணன், நன் மாறன் – இவ்வாறு ஆயிரம் பெயர்கள் உள.

தமிழில் இறைவன் இறைவி பெயர்கள் ஆயிரம் உள. கார்குழலி, பூங்குழலி, வண்டார் குழலி, அஞ்சொலாள், வாடாமலர் மங்கை, வடிவு, வடிவுக்கரசி, வடிவுடையம்மாள், ஒப்பிலாள் என எண்ணிக் கொண்டே போகலாம்.

ஐநூறு – தவறு X ஐந்நூறு – சரி ✓

24.தொடர்ச் சொற்கள்

தமிழில் ஓரெழுத்தொரு மொழிகள், ஈரெழுத்தொரு மொழிகள் மிகுதி. மூன்றெழுத்துச் சொற்களுக்கும் குறைவில்லை. அவை பெரிதும் குற்றியலுகரச் சொற்களாகவோ, உகர ஈற்றுச் சொற்களாகவோ இருக்கும்.

பாக்கு	வரவு
நேற்று	செலவு
பாட்டு	கண்ணு
வீச்சு	பண்ணு
கூப்பு	உருமு
பற்று	கிணறு

மெய்யெழுத்தீற்றுச் சொற்களையும் பேச்சில் உகரம் சேர்த்து ஒலிப்பர்.

தின் – தின்னு. மண் – மண்ணு, உண் – உண்ணு, எண் – எண்ணு, சொல் – சொல்லு, நில் – நில்லு, கல் – கல்லு, வில் – வில்லு.

தொடர்ச் சொற்கள் பல ஒரு பொருளைக் குறிக்கும், ஒரு சொற் போலப் புணர்ந்து நிற்கும்.

கற்சிலை	ஆலிலை	படைப்பாளி
பல்கலை	பாலாடை	திறனாய்வு
முன்னாள்	படகோட்டி	நற்றாய்
தண்ணீர்	எழுத்தாளர்	கண்ணீர்

இவை பிரிக்கக்கூடியன. கல் + சிலை. முன் + நாள், தண் (மை) + நீர். ஆல் + இலை. நல் + தாய், படைப்பு + ஆளி. ஆங்கிலத்தில் தனித்தனியே நிற்கும் சொற்கள் தமிழில் இணைந்து நிற்கும். எனக்குக் கொடு – Give to me. மேசையின் மேல்– on the table. யானையைப்பார் – Look at the elephant. ஆங்கிலத்தில் உருபுகள் தனித்து நிற்கின்றன. தமிழில் உருபு பெயருடன் ஒட்டிக் கொள்ளும்.

உடமை – தவறு X உடைமை – சரி ✓

25. தமிழ்ச்சொற் கட்டமைப்பு

தமிழ்ச் சொற்கள் கட்டமைப்புடையன. அவற்றைச் சிதைக்கக் கூடாது. கூனன் = கூன் + அன்,

பாடினான் = பாடு + இன் – ஆன்

இவற்றை முறையே முதனிலை (பகுதி), இறுதி நிலை (விகுதி என்பர். இடையில் வருவது இடைநிலை. சிலபோது இடைநிலைக்கும் இறுதிநிலைக்கும் இடையே இணைப்புக்கு ஓர் உருபு வரக்கூடும். பாடுகின்றனன் = பாடு + கின்று + அன் + அன். இறுதிக்கு முன்னே ஓர் அன் கூடுதலாகவுளது. இதைச் சாரியை என்பர். படித்தான் = படி +த் +த் + ஆன். இதில் பகுதிக்கு அடுத்த 'த்' சந்தி எனப்படும். பகுதியும் சந்தியும் திரிந்து வருவதுண்டு.

எப்படிப் பார்த்தாலும் சொற்களைத் தனித்தனியே பிரிக்கலாம். பிரித்த படி சேர்க்கலாம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரும் பொருளும் உண்டு. பகுதி தான் சொல். வினைச்சொல்லாயின் இடைநிலை காலம் காட்டும். இறுதி நிலை திணைபால் காட்டும்.

பேச்சில் வந்திரிச்சு, எழுந்திருச்சு, ஒடிச்சுப்பிட்டான் என இவ்வாறு எழுதுவது பிழைபட்ட, திரிபு வழக்குகள். எழுதும் போது இவ்வாறே எழுதாமல் முழுவடிவமாக எழுத வேண்டும். **பேசுவது போல் எழுதாதீர்! எழுதுவது போல் பேசுவதில்லை.**

இவ் இருவழக்கால் தமிழுக்குக் கிடைத்ததே இளமை – கன்னிமை – மாறா நிலை பேறு!

அடமானக் கடை – தவறு X அடைமானக்கடை – சரி ✓

26. சொல்லின் மூவகை நிலை

சொற்களைத் தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை எனப் பிரிப்பர். ஆங்கிலச் சொற்கள் பெரிதும் தனித்து நின்று வாக்கிய மாகின்றன. சீனமொழி போன்றவற்றில் சொற்கள் தனித்தனியே நிற்குமென்பர்.

தமிழில் இருப்பது பெரிதும் ஒட்டுநிலை. சொற்களைப் பொருள் சிதையாமல் பிரித்துவிடலாம். காண்கின்றேன் = காண் + கின்று + ஏன். ஆனால் சங்க காலத்திலேயே ஆதன் தந்தை 'ஆந்தை' என ஆனது உட்பிணைப்பு நிலை. பார்த்துட்டேன், அழிஞ்சுபோ, கண்ராவி என்றிவ்வாறு பேச்சில் வருவன எல்லாம் உட்பிணைப்பு நிலை. தமிழில் பேசுவதுபோல எழுதினால், தமிழ்மொழி பிறமொழிகள் பலவற்றைப் போல உட்பிணைப்பு நிலைக்குப் போய்விடும். மேலும் சிதைந்து உருக்குலைந்துவிடும்.

தமிழ் ஒட்டுநிலையை எழுத்து வழக்கிலும், கட்டளைத் தமிழிலும் கட்டிக் காத்து வருவதனாலேதான் அது என்றும் இளமையாய் இருக்கிறது.

27. பிறமொழிச் சொல்

சிலர் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதை, இழிவாகப் பேசுவார்கள். வாழும் மொழி, உயிருள்ள மொழி பல நாட்டவருடனும் பல மொழியினருடனும் கலக்க நேர்வதால், பிறமொழிச் சொல் புகுவது இயற்கையே.

இயல்பாக, தேவை கருதி வந்து கலப்பன வேறு; வேண்டுமென்றே அறியாமை, சோம்பேறித்தனம், மேட்டுமை, தாம் அறிவு மிக்கவர் என்று காட்டிக்கொள்ளும் தற்பெருமை ஆகியவற்றால் கலப்பனவே தவறுடையன.

இன்று வானொலிப் பண்பலை ஊடகங்களும் தொலைக் காட்சிகளும் தமிழைக் கொன்று தின்று மென்று வருகின்றன. இவர்களைக் கடுமையாகத் திருத்தினாலன்றித் தமிழ் அழிந்து போவது உறுதி.

நடுத்தெருவில் விட்டு
மூன்று சாட்டையடி கொடுக்கும்
சிங்கப்பூர் போலவே,
கடுமையான தண்டனைகள் தரவேண்டும்.

தமிழில் பிறமொழிச் சொல் வரும்போது, தமிழில் மொழியாக்கம் செய்ய வேண்டும்.

Speed break	–	வேகத்தடை.
Break - Fast	–	காலைச் சிற்றுண்டி
Cinema song	–	திரையிசை

இவ்வாறு ஆயிரம் சொற்கள் தமிழாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் மொழிபெயர்ப்பது தெளிவாக இருக்க வேண்டும்.

மடப்பள்ளி – தவறு X மடைப்பள்ளி – சரி ✓

28. தமிழாக்கச் சொல்

ஆங்கிலேயன் மதுரையை Madura என்றான். தமிழையே Tamil என்றான். விழுப்புரம் – Villupuram ஆனது.

எத்தனையோ சொற்களை அவன் ஒலிப்புக்கு ஏற்ப மாற்றினான்.

தமிழனும் தொடக்கத்தில்

Will	–	உயில்
Confirm	–	கண்புறம்
Cup	–	கோப்பை

என நூற்றுக் கணக்கில் தமிழாக்கினான்.

கம்பர் இதில் காட்டியவழி ஒப்பற்றது.

ராம்	–	இராமன்
சீதா	–	சீதை
லட்சுமண்	–	இலக்குவன்
ரத்தாட்சன்	–	குருதிக்கண்ணன்
பரத்	–	பரதன்

கம்பர் இவ்வாறு தமிழாக்கச் சொல்லாக்கிய விதமே (Tamilised Form) தனி. அவற்றைத் தொகுத்து விளக்கி, விளம்பரப் படுத்த வேண்டும்.

மொழிபெயர்த்தல், மொழியாக்கம் இரண்டுக்கும் அப்பால், அப்படியே ஆள நேரிட்டால் 'ஃபோர்டு', 'ஸ்போர்ட்' என்றவாறு மேற்கோட்குறி, சாய்ந்த எழுத்து போன்றவற்றில் குறிக்க வேண்டும்.

தமிழாக்கச் சொல்லுக்கெல்லாம் தனி இலக்கண நூல் வரவேண்டும்.

29. பிரித்து எழுதுதல்

தமிழில் பிரித்தெழுதுதல், சேர்த்தெழுதுதலில் ஒரு மயக்கம் உண்டு. அது பழகப்பழக மயக்கம் தீர்ந்துவிடும்.

தமிழில் எழுதுவதும் அதையே பேசுவதும் ஒரே மாதிரி இருக்கும். Conduct என்பதை கண்டக்ட் என்றால் ஒருபொருள்; அதையே காண்டக்ட் என்றால் ஒரு பொருள்.

தமிழில் பெரிதும் பிரித்தெழுதுவதில்லை. இன்று ஆங்கிலப் பழக்கத்தால், முன்பு புணர்ச்சிவிதி கருதிப் பிரிக்காமல் எழுதியதை இன்று பிரித்தே எழுதுகிறோம்.

வருகிற கல்வி யாண்டன்று

வருகிற கல்வி ஆண்டன்று

கடறாவு படலம் முன்பு - கடல் தாவு படலம் இன்று,

முட்டாட்டாமரை முன்பு - முள் தாள் தாமரை இன்று.

வாட்டடங்கண் முன்பு - வாள் தடங்கண் இன்று.

எழுந்திருந்தான் வேறு; எழுந்து இருந்தான் வேறு.

கடை பிடிக்க வேண்டும்; கடைப் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு இடம்நோக்கிப் பிரிக்க வேண்டும். இன்றேல் பொருள் வேறுபடும். இத்தகையவற்றைத் தொகுத்துப் பார்த்தால் போதும். பழகுவதுதான் இலக்கணம். படித்து வருவது மட்டுமன்று இலக்கணம்; பழகி வருதலே இலக்கணம்.

சில்லறை - தவறு X சில்லரை - சரி✓

30. சேர்த்து எழுதுதல்

கற்கண்டு தின்றால் இனிக்குமா?

கல் கண்டு தின்றால் இனிக்குமா?

கற்கோயில், நற்றமிழ், சொற்றொடர், வாட்கண், நெற்பயிர், முட்செடி, தண்ணீர், பந்தற்கால், படகோட்டி, வேலையாள், கூலியாள், பாற்குடம் – இவைபோல் இன்றும் பிரிக்காது – பிரிக்கமுடியாது பழகிப் போன சொற்களே மிகுதி.

எவ்வாறெனின், தகுந்தாற்போல், வந்தவுடன் – இவ்வாறே பேசுகிறோம். வந்த உடன் என்பதில்லை.

கையெழுத்தை – கை எழுத்து என்றால் கைபோன்ற எழுத்துமாகிவிடும். எட்டுணையும் என்பதையும் எள் துணையும் எனப் பிரித்து, முன்னைய பொருளை உணர்வது கடினம்.

முந்நூறு வேறு; முன்னூறு வேறு (மூன்று நூறு + முன்னைய நூறு)

பொன்னன்று என்பதை

பொன் + அன்று என்றும் பிரிக்கலாம்.

பொன் + நன்று என்றும் பிரிக்கலாம்.

இவை எல்லாம் இலக்கணத்தால் வருபவை அல்ல; பழக்கத்தால் வருபவை. மாந்தருக்குப் பொருளுணர்ச்சி உடம்பில் – உயிரில் – உளத்தில் ஊறிக் கிடக்கிறது. கொஞ்சமாவது நெருங்கிப் பழகாமல் நண்பராவது எப்படி? தமிழுக்கு நண்பராகுங்கள்!

கன்றாவி – தவறு X கண்ணராவி – சரி ✓

31. வேற்றுமைகள் வேண்டுமா?

“ஐயா! சாதிவேற்றுமை, சமய வேற்றுமை, இனவேற்றுமையெல்லாம் வேண்டாம் என்கிறீர்கள்; இந்த மொழி வேற்றுமை மட்டும் வேண்டுமா?” என்று மாணவர் சிலர் கேட்கின்றார்கள்.

சரி. விட்டுவிடுவோம்!

மதுரை பேருந்து நிலையத்தில் நிற்கிறீர்கள். ‘காரைக்குடி விருதுநகர்’ என்று போட்ட பேருந்து வருகிறது. உடனே ஓடிப்போய்க் ‘காரைக்குடி போகிறதா? அங்கிருந்து வருகிறதா?’ என்று அவசரமாக கேட்கிறீர்கள். ஏன் இது. நான்காம் வேற்றுமையாவது காரைக்குடிக்குப் போகும்; ஐந்தாம் வேற்றுமையாவது அங்கிருந்து வரும். இந்த வேற்றுமை தெரியாமல் வண்டியில் ஏறுவீர்களா?

ஓர் அழைப்பு வருகிறது. உடனே என்ன செய்வீர்கள்? எதனைப் பற்றி (2), இதனால் (3), இன்ன காரணத்திற்கு (4), தமிழ் வளர்ச்சியின் பொருட்டு (5), எங்களது அழைப்பு (6), இன்ன இடம், காலத்தின்கண் (7), அன்பீர், நீவிர் வந்து சிறப்பிக்க (8), என்று யாம் அழைக்கின்றோம்(1), ஓரளவு எல்லா வேற்றுமையும் இல்லாவிட்டாலும் சிலவாவது தெரிய வேண்டாமா?

வேற்றுமை தெரியாவிட்டால் வேறு எங்கேனும் போய்விட மாட்டீர்களா?

வெண்ணெய் கடை – தவறு X வெண்ணெய்க் கடை – சரி ✓

32. பத்திரத்தில் வேற்றுமை

வேற்றுமை முதலிய இலக்கணம் மொழிக்கா? நமக்கா? பலர் இலக்கணமெல்லாம் மொழிக்கு; நமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று கருதுகிறார்கள்! பலகோடி பங்குச்சந்தையில் பணம் போட்டு, எழுதி வைத்துக் கணக்குப் பார்க்கிறீர்களே; அது மொழி இல்லையா? மொழி மட்டும் இல்லையென்றால் பால் வெண்மையாய் இருக்கும்; வெண்மைக்கொக்குப் போல் இருக்கும் என இதுபோல் தவற உணர்ந்து தடுமாற வேண்டியதுதான்.

இன்னார் மகனாகிய யான் இன்னாரது
மகனுக்கு எழுதிக் கொடுத்த விற்பனைப் பத்திரம்.
அது இந்த மாநிலத்தில், இன்ன ஊரில்
இன்ன குடியிருப்பின்கண் உளது.
இது கிழக்கு, மேற்கு என நான்கு எல்லைகளுக்கு
உட்பட்டது.
இதனை என் குடும்பச் செலவு முதலியன
காரணமாக, இவருக்கு, உரிய தொகையை
வாங்கிக்கொண்டு விற்பனை செய்து
கொடுக்கிறேன்.

இப்படிப்பட்ட பத்திரங்களில் எட்டு வேற்றுமையும் வருகிறதா என்று மிக உன்னிப்பாகக் கருதுவார்கள். ஏன்? சொத்து மாறிவிடலாமல்லவா?

இனிச் சொல்லுங்கள்! வேற்றுமை வேண்டாமென்றால் விட்டுவிடுவோம்!

33. தமிழ்ச்சொல்லழகு

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்றார் மகாகவி பாரதியார். 'இனிமைத் தமிழ்தரும் சொல்லைப்போல், இனிய சொற்களை வேறெங்கும் யாம் கண்டதில்லை' என்பார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஆர்தல் என்பது நிறைதல். ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும் என்பது சங்கப் பாட்டு. மேலும் மேலும் நிரம்ப உண்டால் தேனும் தெவிட்டு மல்லவா?

கண்ணாரக் கண்டேன்
காதாரக் கேட்டேன்
வயிறார உண்டேன்
காலார நடந்தேன்
மனமார விரும்பினேன்

ஆரத் தழுவினேன். ஆரஅமர வருக. எத்தனை சொற்கள்?

ஆர - நிறைய, நன்றாக, முழுமையாக.

பசியாற வேண்டும்
புண்ணாற வேண்டும்
சூடாற வேண்டும்
சினம் ஆற வேண்டும் (ஆறுவது சினம்)

இவை வேறு. ஆறுதல் - தணிதல். அங்கே ஆர்தல் - நிறைதல். இவ்வாறு சொற்களை வகைப்படுத்திக் கூறினால் மறக்கவே மறக்காது.

வென்னீர் - தவறு X✓ வெந்நீர் - சரி✓

34. கடைக்கண் அருள்க

கண்களை வைத்து உள்ளத்துணர்வை வெளிப்படுத்த முயன்றுள்ளனர்.

கடைக்கண்	–	அருள்
பைங்கண்	–	இரக்கம்
செங்கண்	–	கோபம்
கொடுங்கண்	–	கொடுமை
புன்கண்	–	துன்பம்
வெங்கண்	–	வீரம்
வன்கண்	–	வலிமை
உண்கண்	–	மையுண்டகண்
வாட்கண்	–	வாள் போன்ற கண்
கயற்கண்	–	கயல் போன்ற கண்

மேலும் பலவுள.

கை பழகுதல்	முகம் பார்த்தல்
கை விடுதல்	முகம் சுளித்தல்
கை கூடுதல்	முகம் மலர்தல்
கை கொடுத்தல்	முகம் கறுத்தல்
கை நீட்டுதல்	முகம் சிறுத்தல்
கை கழுவுதல்	முகம் காட்டல்
கை காட்டுதல்	முகம் நீட்டல்
கை பார்த்தல்	முகம் மாறுதல்
கை தூக்கிவிடுதல்	முகம் திரிதல்
கை மடங்குதல்	முகம் கோணுதல்

(இவற்றின் பொருள் வெளிப்படை)

ஆங்கிலத்தில் நூறுவகையில் மரபுத் தொடர்கள் வந்துள. தமிழில் தொடர்கள் உள; தொகுப்பார் போதிய அளவு இலர்.

35. இலக்கணக் கலைச் சொற்கள்

தமிழ் இலக்கணக் கலைச் சொற்கள் சிறந்தவை. அவைகளில் கூட தமிழர் பண்பாடும் நாகரிகமும் வெளிப்படும்.

எழுத்துக்களுக்கு உயிர், மெய், உயிர்மெய் என்று பெயரிட்டது போன்ற ஒன்றைப் பிறமொழிகளில் காண்பதரிது.

மனித உயிர் கட்புலனாவதில்லை. அது தனித்தியங்கும்; மெய்யுடன் சேர்ந்தும் இயங்கும். மெய் தனித்து இயங்காது. உயிர் நீங்கினால் மெய் தனித்தியங்காது. அது மட்டுமன்றி, மெய் உயிருடன் சேர்த்தே உச்சரிக்கப்படும்.

மனிதன் மட்டு மன்றி, உலக உயிரனைத்தும் ‘ உயிர் மெய்களாகவே உள்ளன. ஒவ்வொன்றற்கும் உடலும் அதனை இயக்கும் உயிரும் இருப்பதை, மொழிக்கு ஏற்றியிருப்பது வியப்பே.

தமிழில் 12 உயிரும், 18 மெய்யுமாகிய முப்பதுதான் எழுத்துக்கள்.

குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் எல்லாம் மொழியிடையே வரும் ஒலி வேற்றுமையும் அதனால் ஏற்படும் பொருள் வேற்றுமையுமாம். உகரமும் இகரமுமே மொழியிடையே குறுகுகின்றன. பிற பல எழுத்துக்கள் மொழியிடையே வரும்போது நீண்டொலிப்பதும் (அளபெடை), குறுகி ஒலிப்பதும் (குறுக்கம்) உண்டு.

உயிர்மெய் தமிழில் வடிவங்களே. Katavul என்பதைக் கடவுள் என்கிறோம். KA – தமிழில் க ஆகிறது.

உயிர் மெய் எழுத்து உயிரும் மெய்யும் சேர்ந்ததொரு எழுத்து வடிவச் சுருக்கம்.

கயறு – தவறு X கயிறு – சரி ✓

36. இருதிணை

திணை - என்ற சொல் முதலில் நிலத்தைக் குறித்தது. நிலத்தில் வாழும் உயிர்களைப் பிறகு குறித்தது. மேலும் மக்கள், மக்களின் ஒழுக்கம், குடி, அவர்கள் பாடிய பாடல்கள் என இவ்வாறு சங்க காலத்திலேயே இத்தனை பொருள் வளர்ச்சி கண்டது அச்சொல்.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. (484)

மக்களைச் சுட்டும் பெயர்கள் உயர்திணை எனப்படும். அவரல பிற என்பது ஏனைய உயிரினங்கள். இவற்றை உயர்திணை அல்லாத திணை - அஃறிணை என்றது நாகரிகமான சொல். தாழ்திணை, கீழ் திணை என்னாமை காண்க. 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்றும் 'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது' என்றும் மக்களைப் பிரிக்காது கூறும் மரபு தமிழரின் உயரிய பண்பாட்டை விளக்குகிறது.

உயிரினம் அனைத்தும் ஏதோ காரணத்தால் மாறிமாறிப் பிறக்கின்றன. மனிதரில் மட்டுமன்றி, உயிர்களிலும் உயர்வு தாழ்வு கருதாதவன் தமிழன்.

37. உயிரின வகை

தொல்காப்பியர் உயிரின வகையைக் குறித்திருப்பது ஓர் அரிய செய்தியாகும்.

ஒன்றறி வதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

ஓரறிவுயிர் – தொடுதல் உணர்ச்சி

ஈரறிவுயிர் – தொடுதலும் நாவும்

மூவறிவுயிர் – தொடுதல், நா, மூக்கு

நாலறிவுயிர் – தொடுதல், நா, மூக்கு, கண்

ஐயறிவுயிர் – தொடுதல், நா, மூக்கு, கண், செவி

ஆறறிவுயிர் – தொடுதல், நா, மூக்கு, கண், செவி, மனம்.

நேரிதின் உணர்ந்தோர் என்பதால் தொல்காப்பியர்க்கு முன்பே, இதில் வல்லுநர் பலர் இருந்தமை தெரிகிறது.

ஐம்பொறிகளால் (மெய் வாய் கண் மூக்கு செவி) உயிரினங்களைப் பிரித்துப் பார்ப்பது ஓர் அரிய செய்தி. செடி கொடிகளுக்கும் ஓரறிவுண்டென்று அன்றே கண்டவர்களைப் பாராட்ட வேண்டும்.

அருவெறுப்பு – தவறு X அருவருப்பு – சரி ✓

38. ஆறறி உயிர்கள்

ஓரறிவுயிர்	–	உறுதல்,தொடுதல்	புல், மரம், பிற
ஈரறிவுயிர்	–	ஊறு, நா (உறுதல் – ஊறு)	நத்தை, இப்பி பிற
மூவறிவுயிர்	–	ஊறு, நா, மூக்கு	சிதல் (செல்), எறும்பு பிற
நாலறிவுயிர்	–	ஊறு, நா, மூக்கு, கண்	வண்டு, தும்பி பிற
ஐயறிவுயிர்	–	ஊறு, நா, மூக்கு, கண், செவி	விலங்கு, பறவை பிற
ஆறறிவுயிர்	–	ஊறு, நா, மூக்கு, கண், செவி, மனம்	மக்கள் பிற

மனிதனுக்கு மட்டும் மனம் உண்டா? பிற உயிர்களுக்கும் மனம் உண்டா? அவை எதையும் நினைத்துச் செய்வதுண்டா? பழக்கப் படுத்தினால், அது போலச் செய்வது மனம் ஆகுமா?

யானை, மான், குரங்கு போன்றவற்றுக்கு ஒவ்வொரு கால் மனவுணர்வு தோன்றுவது உண்டு என்பர் ஒருசாரார்.

இவ்வாறு ஏனைய உயிரினங்களுக்கு மனம் உண்டென ஒருசாராரும் இல்லை என ஒரு சாராரும் கூறுவர் எனவும் இதுமேலும் ஆராய்தற்கு உரியதென்றும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

39. ஒரு பொருட் பலசொற்கள்

ஒரு பொருள் தரும் பல சொற்களை நாம் Thesaurus போலத் தொகுக்கலாம். நம் நிகண்டுகள் நன்குவழிகாட்டும். மிகச்சிலவற்றை ஒன்றிரண்டை எண்ணிப் பார்த்தாலே விளங்கும்.

ஞா. தேவநேயப் பாவாணர் கூறுதல் என்பதற்கு மட்டும் 42 சொற்களைத் தேடித் தந்துள்ளார். அவற்றுள் பத்துச் சொற்களை மட்டும் இவண் காண்போம்.

கூறுதல்	–	விலை கூறுவர்
பேசுதல்	–	வாய்ப்பேச்சு
உரைத்தல்	–	விளக்கமாகச் சொல்லுதல்
மொழிதல்	–	உரத்துச்சொல்லுதல்
பகர்தல்	–	விலை பகர்தல்
சொல்லுதல்	–	வாயிலிருந்து வெளியிடுவது.
கழறுதல்	–	கடிந்து, சினந்து பேசுதல்
நவிலுதல்	–	புகழை இசைப்பதுபோல் கூறுதல்
பன்னுதல்	–	பலமுறை கூறுதல், விடாது பேசுதல்
விளம்புதல்	–	திரும்பத் திரும்ப ஒன்றையே கூறுதல்

விளம்புதல் – பழங்காலத்தில் திண்ணைப்பள்ளியில் அ,ஆ,இ,ஈ எனச் சொல்லிக் கொண்டே மணலில் எழுதி விளம்புவர். (விளம்பரம் அதிலிருந்து வந்த புதுச்சொல்.) இவற்றிற்குப் பொதுப் பொருளுமுண்டு, நிழற் பொருளுமுண்டு.

பங்கெடுத்துக் கொள்கிறேன் – தவறு X கலந்துகொள்கிறேன் – சரி✓

40. முன்னெழுத்தும் கையெழுத்தும்

ஒருவர் கையெழுத்தே அவரைப் பற்றிய முதல் ஆவணம். இதனைத் தாய்மொழியில் போட வேண்டும். பிற மொழிகளிலும் போட்டாலும் தாய் மொழியிலும் போடவேண்டும்.

முன்பு சேந்தன் கண்ணன், காப்பியன் சேந்தன் எனத் தந்தை பெயரை முழுமையாகப் போட்டனர். கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றும் போடுவர். ஆலங்குடி வங்கனார், கோவூர் கிழார் என ஊருடன் சேர்த்தும் போட்டனர். இன்றும் சிலரிடையே அப்பழக்கம் உண்டு.

ஆங்கிலப்பழக்கம் வந்த பிற்பாடு RM.முத்தப்பன், KR.பெரியணன் என முன்னெழுத்தை ஆங்கிலத்திலேயே போடுகின்றனர். எம்.ஜி.ஆர், ஆர்.எம்.வி. என அடிப்பட வழங்கியவை பல.

ராம. பெரி; சோமலெ; கு.ப.ரா; தி.ஜ.ர; என வழங்குவன ஒருவகை. சில முகவரிகள் விலாசம் என்ற பெயரால் மிக விலாசமாக இருக்கும். சுப. ராம, சே.பழ.கா. என்றிருக்கும். இதுவும் முன்னோரை நினைவு கூரப் பயன்படும்.

தமிழில் பெயரை எழுதும் பொழுது, தமிழிலேயே, முன்னெழுத்துக்களை எழுதுவதென்ற உறுதி மொழியைக் கடைப்பிடிக்க வேண்டும். திரை உலகம் இதற்கு வழிகாட்டலாம்.

பெயர் தமிழில், முன்னெழுத்து ஆங்கிலம், இது ஏன்? தமிழிலேயே முன்னெழுத்தைப் போடுவதில் பல நிலை உண்டு. எங்ஙனமாயினும் உங்கள் தந்தைபெயரும் உங்கள் பெயரும் தமிழாகவே இருக்கட்டும்.

உண்டை - தவறு X   உருண்டை - சரி✓